செ.வெ.எண். 60

22.8-2017

# பத்திரிக்கை செய்தி

மாவட்டத் தொழில் மையம், திருநெல்வேலி மூலமாக "ஆற்றல் தணிக்கை மேம்பாடும் ஆற்றல் சேமிப்பும்" என்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு முகாம் இன்று (22.08.2017) மாவட்ட அறிவியல் மைய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

முகாமிற்கு தலைமையேற்று சிறப்புரை ஆற்றிய திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசும் போது

"Promotion of Energy Audit and Conservation of Energy" என்ற அருமையான திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இத்திட்டம் பிற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

மேலும், இன்று நடைபெறும் விழிப்புணர்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பயிற்சிகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும், எனவும்

பயிற்சியைத் தொடர்ந்து மூன்றாம் கட்டமாக ஆற்றல் தணிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு தணிக்கைக் கட்டணத்தில் 50% (அதிகபட்சம் ரூ.50,000/-) தமிழக அரசின் மானியமாக வழங்கப்படும், எனவும்

இறுதிக் கட்டமாக தணிக்கையாளரின் பரிந்துரையின்படி புதிய இயந்திரங்கள் நிறுவினாலும் ஏற்கனவே உள்ள இயந்திரங்களை மாற்றி வடிவமைத்தாலும் அதற்கான முதலீட்டில் 25% (அதிகபட்சம் ரூ.2,00,000/-) மானியமாக வழங்கப்படும். எனவே கூட்டத்தில் பங்கு பெற்ற, பங்கு பெற வர இயலாத குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் ஆற்றல் சேமிப்பில் தமது நிறுவனத்தின் பங்கை உறுதி செய்யுமாறும் தமிழக அரசு வழங்கும் மானியங்களைப் பெற விண்ணப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர், அலுவலர்கள், தமிழ்நாடு மின் பகிர்மான கழக கண்காணிப்புப் பொறியாளர், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி மண்டல மேலாளர் திரு.சுரேந்திரன், சிட்கோ கிளை மேலாளர் திரு.ஆனந்த், நெல்லை மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சங்க செயலாளர் திரு.சஞ்சய் குணசிங், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஜெகவீர பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர் மற்றும் மாவட்ட தொழில் மைய மேலாளர் (கிராம தொழில்கள் மற்றும் நிர்வாகம்) திரு.அப்துல் அஜுஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்